# செய்தி வெளியீடு

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் 2.7 கோடி தாழ்வழுத்த மின் நுகர்வோர்கள் உள்ளனர். தாழ்வழுத்த மின் நுகர்வோர்கள் தங்களின் மின் கட்டணங்களை எளிதில் செலுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மேற்கொண்டு வருகிறது. மின் கட்டணம் செலுத்துவதை கணினி மயமாக்கி வங்கிகள், தபால் நிலையங்கள், வலையதள வங்கி, பண அட்டை, கடன் அட்டை, வங்கி கவுண்டர்கள், வங்கி ஏ.டி.எம் கள், வங்கி கைபேசி செயலிகள், அரசு இ–சேவை மையங்கள் என பல்வேறு முறைகளில் மின் கட்டணம் செலுத்த வசதிகள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மின் நுகர்வோருக்கு மேலும் நலம் பயக்கும் வகையில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் கைபேசி செயலி வழியாக மின் கட்டணம் செலுத்துவதற்கு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்செயலியை (TANGEDCO app) கூகுள் பிளேஸ்டோர் மூலமாக தங்களுடைய கைபேசியில் நிறுவி உபயோகப்படுத்தலாம்.

இச்செயலியின் உள் நுழைவு பக்கத்தில் ஏற்கனவே இணையதளத்தில் பதிவு செய்த மின் பயனீட்டாளர்கள் தங்களுடைய பயனீட்டாளரின் பெயர், கடவுச்சொல் உபயோகித்து பின் குறியீட்டு எண்ணை தேர்வு செய்து கொள்ளலாம். புதிய மின் பயனீட்டாளர்கள் தங்களுடைய மின்நுகர்வோர் எண், கடவுச் சொல், மின்னஞ்சல் முகவரி மற்றும் கைபேசி எண்ணை பதிவு செய்தவுடன் கைபேசியில் செயற்பாட்டு எண் அனுப்பபடும்.

**<u>இச்செயலில் பின்வரும் அம்சங்கள் உள்ளது</u>**

| | | |
|---|---|---|
| எனது கட்டண விவரம் | : | பதிவு செய்த மின் பயனீட்டாளர்களின் கட்டண விவரங்கள் அறிய மற்றும் மின் கட்டணம் செலுத்தும் வசதி |
| துரித கட்டணம் | : | பதிவு செய்யாத மின் பயனீட்டாளர்களின் கட்டணங்களை செலுத்தும் வசதி |
| எனது மின் பயனீட்டாளர் எண்கள் | : | பதிவு செய்த மின் பயனீட்டாளர்களின் பரிவர்த்தனை மற்றும் மின் பயனீட்டு விவரங்கள் அறிய. |
| விகித கணக்கீடு | : | மின் கணக்கீடு செய்யப்பட்ட விவரங்கள் அறிய. |
| பரிவர்த்தனை விவரங்கள் | : | பதிவு செய்த மின் பயனீட்டாளர்களின் மின் கட்டணம் செலுத்திய பரிவர்த்தனை விவரங்களை அறிய. |

**<u>கட்டணம் செலுத்துவதற்கான வழிமுறைகள்</u>**

1. **<u>வலையதள வங்கி</u>** : ஆக்ஸிஸ் வங்கி, பாங்க் ஆப் பரோடா , பாங்க் ஆப் இந்தியா, கனரா வங்கி, சிட்டி யூனியன் வங்கி, பெடரல் வங்கி, எச்.டி.எப்.சி வங்கி, ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி, ஐ.டி.பி.ஐ வங்கி, இந்தியன் வங்கி, இந்தியன் ஒவர்சிஸ் வங்கி, பஞ்சாப் நேஸனல் வங்கி, கரூர் வைஸ்யா வங்கி, லட்சுமி விலாஸ் வங்கி, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, யூனியன் வங்கி, தமிழ்நாடு மெர்கண்டல் வங்கி, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி.
2. **<u>பண அட்டை / கடன் அட்டை</u>** : எச்.டி.எப்.சி நுழைவி
3. **<u>பண அட்டை</u>** : இந்தியன் ஒவர்சிஸ் வங்கி

இச்செயலியை பயன்படுத்தி மின் கட்டணம் பரிவரித்தனை வெற்றிகரமாக முடிந்தவுடன் மின் இரசீது கிடைக்கப்பெறும்.

இச்செயலின் வழியாக மின் கட்டணம் செலுத்தும் வசதி 12.07.2017 அன்று துவக்கப்பட்டது.

இலவச விவசாயத்திற்கான மின்னிணைப்பு விண்ணப்பங்களுக்கு தட்கல் முறையில் முறையே 5, 7.5, 10 குதிரை திறன் வரை விண்ணப்பித்தவர்களுக்கு வழங்குவதற்கான திட்டம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. தற்சமயம் மேலும் 15 குதிரை திறன் கோரி விண்ணப்பித்தவர்களும் பயன்பெறும் வகையில் இத்திட்டம் விரிவாக்கப்படுகிறது. 15 குதிரைத் திறன் கோரி விண்ணப்பித்தவர்கள் ரு.4.0 இலட்சம் செலுத்தி தட்கல் திட்டத்தின் முலம் மின் இணைப்பு பெற்றுக் கொள்ளலாம்.

* * * * *